

05.11.2026 செய்திகள்

கடனின்றி அமையாது அரசு

- அரசு ஏற்கெனவே தாம் செய்து கொண்டிருக்கின்ற வேலைகளைத் திறம்படச் செய்யலாம்; மேம்படுத்தலாம்; தனது வல்லமையைக் காட்டலாம்.
- புதிதாக ஏதாவது செய்ய வேண்டுமென்றால் நிறையப் பணம் தேவைப்படுகிறது. அதனைத் தனது வருவாயைப் பெருக்குவதன் மூலம் பெறலாம் அல்லது கடன் மூலம் பெறலாம்.
- ஒரு மாநில அரசைப் பொறுத்தவரை வருவாயைப் பெருக்கும் வழிகள் மிகக் குறைவே. ஏனென்றால், பெரும்பகுதி வருவாயை அளிக்கும் பொருள் – சேவை வரி சம்பந்தமான முடிவுகளை எடுக்கும் அதிகாரம் தனிப்பட்ட மாநில அரசுகளின் கையில் இல்லை
- மத்திய அரசுக்கு இருப்பதுபோல் பொதுத்துறை நிறுவனங்கள், ரிசர்வ் வங்கி ஆகியவற்றில் இருந்து பெறப்படும் லாபப் பங்கு போன்ற வருவாய் வாய்ப்புகள் மாநில அரசுகளுக்கு மிக மிகக் குறைவே. கிட்டத்தட்ட இல்லை என்றே சொல்லலாம்.

» நிதியின் முக்கியத்துவம்

- தமிழக அரசு தனது வருவாயைப் பெருக்க நியமித்துள்ள குழுவின் வழிகாட்டுதலின்படி, அதிகபட்சமாக ரூ.15,000 கோடி கூடுதல் வருவாய் ஈட்ட முடியும் என்று திட்டமிட்டுள்ளது.
- மேலும், வீண் செலவுகளைத் தவிர்த்துக் கூடுதலாகப் பணத்தைத் திரட்டலாம். ஏற்கெனவே உள்ள செலவினங்களைக் குறைத்து அதில் மிஞ்சும் பணத்தைப் புதிய திட்டங்களுக்கு செலவிடலாம்.
- ஆனால் உண்மை நிலவரம் என்னவென்றால், பல செலவுகளைக் குறைக்க இயலாது. எடுத்துக்காட்டாக, அண்மையில் தமிழக அரசு வெளியிட்ட வெள்ளை அறிக்கையில் குறிப்பிட்டதுபோல் பொறுப்பேற்ற செலவினங்களுக்கு – அதாவது சம்பளம், ஓய்வூதியம், வட்டி ஆகியவற்றுக்கு மட்டும் அரசின் வருவாயில் தோராயமாக 64% போய்விடுகிறது.
- மேலும், சட்டப்படி வழங்க வேண்டிய மானியங்கள் மத்திய நிதி உதவித் திட்டங்களுக்கான பங்கு, பிற கட்டாயச் செலவினங்களுக்குத் தோராயமாக 23% போய்விடுகிறது.
- வெள்ளை அறிக்கையின்படி இவற்றையும் குறைக்க இயலாது. மீதம் இருப்பது 13% மட்டுமே.

» தவிர்க்க முடியாதது கடன்

- தவிர்க்க இயலாத செலவுகளைத் தவிர்த்த மற்ற செலவுகளுக்கும் புதிய திட்டங்களுக்குத் தேவையான செலவுகளுக்கும் தேவையான பணத்தைத் திரட்ட இருக்கும் ஒரே வழி கடன் மட்டுமே.

- நாட்டின் வளர்ச்சிக்குத் தேவையான புதிய திட்டங்களைச் செயல்படுத்த வேண்டுமானால், ஓர் அரசு கடன் வாங்கியே தீர வேண்டும்.
- இல்லையென்றால், பொருளாதார வளர்ச்சி, மேம்பாடு தடைபடும்; இருக்கும் நிலையிலே உறைந்துவிடும்.
- ஆக, அரசின் வல்லமை அது எவ்வளவு கடன் வாங்க முடியும் என்பதைப் பொறுத்ததே. அதுவும் சட்டதி ட்டங்களுக்கு உட்பட்டது.
- நிதிப் பொறுப்புடைமைச் சட்டம் 2003 இன் கீழ் வகுக்கப்பட்ட விதிகளின்படி, மாநில அரசு அதிகபட்சமாக மொத்த உள் மாநில உற்பத்தியில் 3% அளவுக்கு மட்டுமே கடன் வாங்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.
- இந்த வரம்புக்கு உட்பட்டு 2026-27 ஆம் ஆண்டில் தமிழக அரசு வாங்கத் திட்டமிட்டிருக்கும் கடன் தொகையின் அளவு ரூ.1,73,445 கோடி. மேலும், இதுவரை வாங்கிய கடன், நடப்பாண்டில் வாங்கும் கடன் உட்பட, நிலுவையில் இருக்கும் கடனின் அளவு மொத்த உள் மாநில உற்பத்தியின் அளவில் 20 சதவீதத்துக்கு மேல் இருக்கக்கூடாது என்கிற மத்திய அரசின் அறிவுறுத்தல் உள்ளது.

» எப்படிச் சமாளிக்கலாம்?

- மத்திய அரசின் அறிவுறுத்தல் 20% என்றிருக்க, பொருளியல் அறிஞர் கே.ஆர்.சண்முகம் தனது ஆய்வின்படி 23% வரை இருக்கலாம் என்று கூறுகிறார்.
- இந்த அறிவுறுத்தலைப் பின்பற்றுவது கட்டாயம் இல்லை; எனினும் பொருளாதாரத்தின் நீடித்த வளர்ச்சியை உறுதி செய்ய இந்த அளவைப் பின்பற்றுவது நல்லது. இல்லை எனில், வட்டி செலுத்துவதற்கே வருவாயில் பெரும்பகுதி சென்றுவிடும், மற்ற செலவுகளுக்குப் பணம் இருக்காது. அது பொருளாதார வளர்ச்சியைப் பாதிக்கும்.
- வட்டி என்பது கடந்தகாலச் செலவுகளுக்காக, கடந்த காலத்தில் வாங்கிய கடன்களுக்காக இந்த ஆண்டு வருவாயில் ஒரு பகுதியைச் செலுத்துவது ஆகும்.
- ஒரு கட்டத்தில் வட்டி செலுத்துவதற்கும் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கும் கடன் வாங்க வேண்டிய சூழல் ஏற்படும்.
- இது கடன் என்னும் பொறியில் அகப்படுவதாகும். இத்தகைய சூழலில் யாரும் புதிதாகக் கடன் கொடுக்க முன்வர மாட்டார்கள்.
- இது பழைய கடன்களைத் திருப்பித்தர முடியாத சூழ்நிலைக்கு இட்டுச் செல்லும்; நடப்பாண்டு தேவைகளுக்கான பணத்தைத் திரட்ட முடியாத நிலையை ஏற்படுத்தும்.
- இதைத் தவிர்க்கவே தாக்குப் பிடிக்கக்கூடிய வரம்புக்கு உட்பட்டுக் கடன் வாங்க வேண்டும்.
- நடப்புச் செலவுகள் கடன் வாங்கியே செய்யப்படுவதால், தார்மிக அடிப்படையில் தேவையற்ற செலவுகளைத் தவிர்த்து, நாட்டின் வளர்ச்சிக்குத் துணையுரியும் செலவுகளை மட்டுமே செய்ய வேண்டும் என்கிற கட்டாயத்தில் அரசு உள்ளது.
- வீண் செலவுகள் நாட்டின் வளர்ச்சித் திட்டங்களுக்குப் போதிய பணம் இல்லாத நிலையை உருவாக்கும்; பொருளாதார வளர்ச்சியைப் பாதிக்கும். அதனால் ஏற்படும் வேலைவாய்ப்பின்மையால் மக்கள் கடுமையாகப் பாதிக்கப்படுவார்கள்.